**வாக்குமூலம்**
**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்,**
**மேட்டூர்,**
**தேதி: 17.07.2025**
**OS. No. 278/2013**
**வழக்கு சாட்சி PW.1–சின்னதம்பி, த/பெ.முத்தப்பன்**

(சாட்சி சத்தியப்பிரமாணம் செய்து பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார் )

**<u>பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி:</u>**

9) நீதிமன்றத்திலிருந்து ஆணையர் என்னுடைய விவசாய நிலமான ச.எண்.209/4 சொத்தை பார்வையிட்டு, அதில் வீடு இல்லை என்று அறிக்கை தாக்கல் செயதார் என்றால் ஆணையர் பார்வையிட்ட போது அங்கு வீடு இருந்தது. அவ்வாறு வீடு எதுவும் இல்லை என்றும், நான் வழக்கிற்காக தவறாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. என்னுடைய வீடு ஆத்தூர் பைப்லைன் ரோட்டில் உள்ளது என்றால் சரிதான். தாவா சொத்திலிருந்து வடக்குபுறம் சுமார் 1 கி.மீ தூரம் தொலைவில் என்னுடைய வீடு உள்ளது. என்னுடைய விவசாய நிலமான ச.எண்.209/4 க்கு வடக்குபுறம் சென்னியப்பனின் நிலம் உள்ளது. அதற்கும் வடக்கே மூர்த்தி அவர்களின் நிலம் உள்ளது. மூர்த்தியின் நிலத்திற்கு வடக்கே ஏழுமலையின் நிலம் உள்ளது. ஏழுமலையில் நிலத்திற்கு வடக்கே என்னுடைய விவசாய நிலம் மற்றும் வீடு உள்ளது, அதன் சர்வே எண் எனக்கு நினைவில்லை.

10) மேற்கண்ட வீட்டிலிருந்து தெற்குபுறம் மேற்கண்ட நபர்களின் நிலங்களின் வழியாகத்தான் ச.எண்.209/4 ல் உள்ள என்னடைய விவசாய நிலத்திற்கு நான் சென்று வருகிறேன் என்றால் சரியல்ல, அவ்வாறு எந்த வழியும் இல்லை. பிரதிவாதிகளின் நிலம் ச.எண்.209/4 க்கு மேற்கே உள்ளது என்றால் சரியல்ல. நான் மேற்கண்ட வழியில் தான் சென்று வருகிறேன் என்றும், இல்லை என்று வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல, ச.எண்.209/3 ன் வழியாகத்தான் நான் சென்று வருகிறனே். 3ம் பிரதிவாதி பாப்பா 2ம் பிரதிவாதியின் அக்கா ஆவார். 3ம் பிரதிவாதி சொத்தில் எந்த உரிமையும் இல்லை என்று விடுதலை பத்திரம் எழுதி கொடுத்துள்ளார் என்றால் எனக்கு தெரியாது, ஆனால் எழுதி கொடுக்கவில்லை என்று தான் 3ம்

பிரதிவாதி சொன்னார். ச.எண்.209/4 க்கு மேற்கில் உள்ள ச.எண்.209/3 ல் கண்ட நிலத்தை 1ம் பிரதிவாதி தான் பாகம் பிரித்து விவசாயம் செய்து வருகிறார் என்றால் சரிதான். அதில் அவரது தென்னை மரங்களும், விவசாய நிலமும் உள்ளது. அந்த நிலத்தில் அவர் போர்வெல் அமைத்துள்ளார் என்றால் சரிதான்.

11) அந்த ச.எண்.209/3 ன் தென்புறத்தில் விவசாய டிராக்டர் செல்வதற்கும், ஆடு, மாடு மேய்பதற்கும் 1ம் பிரதிவாதி வைத்துள்ளார் என்றும், அந்த நிலம் பொலியாக உள்ளது என்றால் சரியல்ல. அதில் தடம் எதுவும் இல்லை என்றால் சரியல்ல, அதில் தான் நாங்கள் சென்று வருகிறோம். மேற்கண்ட பொலியில் தான் 1ம் பிரதிவாதி போர்வெல் அமைத்துள்ளார் என்றால் சரியல்ல. அவர் போர்வெல் அமைத்த பிறகு அந்த பொலியையும் சேர்த்து ஓட்டி விவசாயம் செய்து வருகிறார்கள் என்றால் சரியல்ல. மேற்கண்ட போர்வெல்லுக்கு மின் இணைப்பு பெற நங்கவள்ளி மின்வாரியத்திற்கு 1ம் பிரதிவாதி மனு கொடுத்திருந்தார் என்றும், அதற்கு நாங்கள் ஆட்சேபனை தெரிவித்துள்ளோம் என்றால் சரியல்ல. ச.எண்.212/5 ல் கிணறு உள்ளது என்றால் சரிதான். அந்த கிணற்றில் தண்ணீர் எடுக்ககூடாது பிரதிவாதிகளை நான் தடுத்தேன் என்றால் சரியல்ல. பிரதிவாதிகள் எங்கள் மீது நங்கவள்ளி காவல் நிலையத்தில் புகார் கொடுத்திருந்தார் என்றால் சரிதான்.

12) நான் தான் பிரதிவாதிகளை ஆட்களை அழைத்து கொண்டு மிரட்டினேன் என்றும், 06.10.2013 ல் ஆட்களை அழைத்து வந்து என்னை மிரட்டினார் என்று வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. நான் பிரதிவாதிகளை மிரட்டியது குறித்து பிரதிவாதிகள் கொடுத்த புகாரின் பேரில் என் மீது குற்ற வழக்கு பதிவு செய்து, அது நிலுவையில் உள்ளது என்றால் சரிதான். அந்த சமயத்தில் பிரதிவாதிகள் மருத்துமனையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டார்கள் என்றால் சரிதான், நாங்களும் தான் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டோம். இந்த வழக்கு தாக்கல் செய்த பிறகும் நான் 12.01.2022 ல் பிரதிவாதிகளை மிரட்டிதால் அவர்கள் நங்கவள்ளி காவல் நிலையத்தில் புகார் கொடுத்தார்கள் என்றால், அவர்கள் என்னை மிரட்டிவிட்டு எனக்கு முன்னதாக புகார் அளித்துவிட்டனர். மீண்டும் 27.12.2024 ம் தேதியில் நான்

பிரதிவாதிகளை அடித்துவிட்டதால், பிரதிவாதிகள் மீண்டும் காவல் நிலையத்தில் புகார் அளித்துள்ளனர் என்றால் அவர்கள் என்னை அடித்துவிட்டு எனக்கு முன்னதாக புகார் அளித்துவிட்டனர். பாலமுருகன் என்பவர் என்னுடைய மகன் என்றால் சரிதான். பொன்னுசாமி என்பவர் என் மாமன் ஆவார். நாங்கள் அனைவரும் சேர்ந்து பிரதிவாதிகளுக்கு கொலை மிரட்டல் விடுத்ததாக பிரதிவாதிகள் மேற்கண்ட புகாரில் சொல்லியுள்ளார்கள் என்றால் சரியல்ல. நான் சொல்வதுபோல் ச.எண்.209/3 ல் வழிதடம் எதுவும் இல்லை என்றும், நான் பொய்யாக வழக்கு தாக்கல் செய்து சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. அதனால் வழக்கு தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றால் சரியல்ல.

ஓம்/–திரு. M.செல்வம்,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மேட்டுர்.